# வெலிகம நகர சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதியதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, வெலிகம நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக பெறவேண்டிய முத்திரை கட்டண வருமானம் முறையே ரூபா 4,700,000 தொகை குறைவாக மற்றும் ரூபா 1,185,991 தொகை மிகையாகவும் கணக்கீடு செய்திருந்தது.

(ஆ) பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 185,599 தொகை மற்றும் ரூபா 502,260 தொகைக்கான குப்பை வரி வருமானம் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,145,791 இற்கான தொகை கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 863,675 இற்கான சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிடப்பட்டிருந்த தொகை மீளாய்வாண்டிற்கான சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் செலவுகளில் இருந்து குறைப்பட்டிருந்தது.

(உ) செலுத்த வேண்டிய ரூபா 8,555,176 தொகையான ஓய்வூதியப் பங்களிப்புக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சுற்றுலா ஹோட்டல்கள் தொடர்பாக பெறவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 245,280 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகள் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 5,449,055 தொகை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 39,689,972 தொகைக்கான வருமானக் கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 1,464,647 தொகைக்கான 04 மீதிகள் அடங்கியிருந்தன.

(ii) தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 3,467,440 தொகைக்கான 10 மீதிகள் அடங்கியுள்ளன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,824,991 தொகையாக காணப்பட்டதுடன், அம்மீதிகளில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 2,817,380 தொகைக்கான 14 மீதிகளும் அடங்கியுள்ளன.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 130,062,204 தொகைக்கான 12 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தற்கு முடியாதிருந்தது.

**1.3.5 இணக்கமின்மை**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழ் காணப்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 164(2) | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தங்குமிடங்கள் என்பவற்றில் வருடாந்த வருமானத்தில் 1 சதவீத வரி |

| | | |
|---|---|---|
| | | அறிவிடப்பட வேண்டும். எனினும், அதிகாரப் பிரதேசத்தில் பதிவு செய்துள்ள 04 ஹோட்டல்களில் இருந்து கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. வரி அறவீடு செய்தற்காக முறையான கணக்கு அறிக்கைகள் பயன்படுத்திருக்க வில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் | |
| | (i) அத்தியாயம் iv பந்தி 2.6 | அமைய / பிரதியீட்டு ஊழியர்கள், தொழிலாளர்களுக்காக வரலாற்றுக் குறிப்பு பேணியிருக்கவில்லை. |
| | (ii) அத்தியாயம் xii பந்தி 22.4 | சபை ஊழியர்களின் சம்பளமற்ற விடுமுறை அறிக்கைகள் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 756,757 | ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொருட் பதிவேடு சமப்படுத்தப்பட்டு பொருட் பதிவேட்டிலுள்ள மீதி உடன் பௌதீக ரீதியாக காணப்பட்ட மீதி சரியானதா என பரிசோதனை செய்யப்பட வேண்டுமெனினும், அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமாக காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,479,842 தொகைக்கான கணினிகள் துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக தனியாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,440,297 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,434,609 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 10,050,000 | 10,588,176 | 9,284,411 | 7,089,244 | 19,800,000 | 6,466,613 | 8,973,523 | 5,785,479 |
| வாடகை | 15,897,200 | 12,809,606 | 11,178,912 | 5,426,584 | 12,665,000 | 990,952 | 11,392,601 | 3,795,890 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 3,326,500 | 4,453,836 | 4,453,836 | 336,459 | 1,603,000 | 2,391,421 | 3,260,307 | 336,459 |
| ஏனைய வருமானங்கள் | 45,456,000 | 30,435,604 | 25,102,453 | 27,419,003 | 49,946,000 | 27,569,287 | 8,481,935 | 22,085,852 |
| மொத்தம் | 74,729,700 | 58,287,222 | 50,019,612 | 40,271,290 | 84,014,000 | 37,418,273 | 32,108,366 | 32,003,680 |

ஏனைய வருமானங்களின் கீழ் சேவைக்கான கட்டணம், எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டம் மற்றும் முத்திரை கட்டணமும் அடங்கியிருந்தன.

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 74,729,700 தொகையாகக் காணப்பட்டதுடன் சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 58,287,222 ஆக காணப்பட்டது. ரூபா 32,003,680 தொகையாக காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 90,290,902 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 50,019,612 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 40,271,290 ஆக காணப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

**(அ) வீதவரி**

ஆரம்ப நிலுவை வீதவரி மீதி ரூபா 5,459,835 ஆக காணப்பட்டதுடன், ரூபா 7,215,544 தொகையான சிட்டையிடல் உடன் அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 12,675,379 ஆக காணப்பட்டது. ஆரம்ப நிலுவையில் மற்றும் சிட்டையிடல்களில் ஆண்டின் போது மொத்த அறவீடு ரூபா 5,932,102 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 6,743,277 தொகையான உயர்ந்த பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது.

**(ஆ) குப்பை வரி**

குப்பை வரி அறவீடு செய்தல் தொடர்பாக துணை விதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) களியாட்ட வரி**

ஆரம்ப நிலுவை களியாட்ட வரி மீதி ரூபா 325,643 தொகையாக இருந்ததுடன், ரூபா 296,011 தொகையான சிட்டையிடலுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 621,654 தொகையாகக் காணப்பட்டது. நிலுவைத் தொகையில் ரூபா 45,000 மற்றும் சிட்டை இடல்களில் இருந்து ரூபா 230,689 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 345,965 தொகையாகக் காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆரம்ப நிலுவை மீதி ரூபா 3,795,890 தொகையாக காணப்பட்டதுடன், சிட்டையிடல் ரூபா 12,809,606 தொகையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 16,605,495 தொகையாக காணப்பட்டது. சிட்டையிடல்களில் ரூபா 10,048,613 தொகையில் மற்றும் நிலுவை மீதியில் ரூபா 1,130,299 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 5,426,584 தொகை அளவு உயர்ந்த பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது.

(ஆ) கடை வாடகைகள் அறவீடு செய்தல் தொடர்பாக தபப/பபகொ/2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் 82 கடைகளின் இறுதியாக பெறுமதி மதிப்பீடு செய்திருந்த திகதியை கண்டுகொள்ள முடியும். மேலும் 57 கடைகள் 2012 ஆண்டிற்கான கடைவாடகை பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்த 53 கடைகளில் இருந்து ரூபா 3,241,693 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

(இ) சபையினால் 2017 ஆண்டிற்கான கப்பரதொட மீன் விற்பனை நிலையம் ரூபா 2,455,000 தொகைக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை கையொப்பமிட்டிருக்காமையினால் வருட இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,253,683 நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதில் ஆபத்து ஒன்று காணப்பட்டது. 2015 ஆண்டு தொடர்பாகவும் அதே கேள்விதாரரிடம் ரூபா 180,850 தொகை சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

(உ) கல்பொக்க மாட்டிறைச்சிக் கடை கடந்த 03 வருடங்களுக்காக வாடகைக்கு கொடுத்ததால் அறவிடப்பட வேண்டியிருந்த கடை வாடகை ரூபா 408,198 இற்கான தொகை ஒன்று நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அனுமதிப்பத்திர கட்டணமாக ரூபா 336,459 தொகைக்கான ஆரம்ப மீதியொன்று காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 3,790,295 ஆக இருந்து காணப்பட்ட ஆரம்ப நிலுவை மீதியில் பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக 03 பாதைகளுக்குரிய 125 அறிவித்தல் பலகைகளில் ரூபா 348,667 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 23,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 26,483,120 தொகை காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்துதலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

நகர சபை கட்டளைச் சட்டத்தில் 157 ஆம் பிரிவின் பிரகாரம் 15 பிரதான விடயங்கள் நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்கப்பட வேண்டியிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 திகதி அளவில் பிரதான மற்றும் ஐந்து விடயங்களுக்கு மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

தயாரிக்கப்பட்டிருந்தத வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு இணங்க பாதீட்டு ஏற்பாடுகள் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்த்த வெளியீட்டு (output) மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

06 பல்வேறு செய்பணிகளில் நிறைவேற்றுவதற்காக ரூபா 20,397,421 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை (output) பெற்றிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்பிக்கப்படுகின்றன.

| செய்பணி | மதிப்பீட்டுத் தொகை | நிறைவேற்றப் பட்ட அளவின் பெறுமதி | அவதானிப்பு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| பொதுவான நிருவாகம் | 275,000 | 125,783 | எதிர்பார்த்த அளவு பூர்த்தி செய்திருக்கவில்லை. |
| சுகாதார சேவை | 2,921,000 | 275,416 | எதிர்பார்த்த அளவு பூர்த்தி செய்திருக்கவில்லை. |
| பௌதீக திட்டமிடல் பாதைகளும் காணிகளும் | 22,454,000 | 19,729,541 | எதிர்பார்த்த அளவு பூர்த்தி செய்திருக்கவில்லை. |
| சேதனப் பசளையும் ரண் பொஹரையும் | 1,157,000 | 9,850 | எதிர்பார்த்த அளவு பூர்த்தி செய்திருக்கவில்லை. |
| பொதுமக்கள் பயன்பெறு சேவைகள் | 1,002,000 | - | செயற்படுத்தியிருக்கவில்லை |
| நலன்புரி சேவைகள் | 44,511,000 | 256,831 | எதிர்பார்த்த அளவு பூர்த்தி செய்திருக்க வில்லை. |
| | 72,320,000 | 20,397,421 | |

**(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

குப்பை முகாமைத்திற்கான குப்பைகளை சேகரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது 91 ஊழியர்களின் சம்பளம் வாகனங்கள் மற்றும் எரிபொருளுக்கான ரூபா 34,291,810 தொகை செலுத்தியிருந்தது. சேதனப் பசளை உற்பத்திக்காக 29 ஊழியர்களின் ஈடுபடுத்தப்பட்டு அவர்களுக்கு சம்பளமாக ரூபா 10,486,796 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சேகரிக்கப்படும் உக்கக்கூடிய குப்பைகளில் சேதனப் பசளை உற்பத்தி சுமார் 3.4 சதவீதங்கள் ஆக காணப்பட்டதுடன் விற்பனை வருமானம் ரூபா 1,670,720 தொகையாகும். உக்காத குப்பைகள் சேதனப் பசளை நிலையத்திற்கு அண்மித்து முறைசாராத விதமாக குவிக்கப்பட்டு இருந்ததுடன் அதற்காக பெறப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திரம் 2016 ஏப்ரல் 20 திகதியில் செல்லுபடியுற்றதாக இருந்தது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரழில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

2016 மற்றும் 2017 ஆண்டுகள் தொடர்பாக 31 ஊழியர்களின் சம்பளமற்ற விடுமுறை தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 2,145,791 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அத்தொகையில் 2018 மே 18 திகதி அளவில் ரூபா 937,612 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 16 பதவிகளில் வெற்றிடமும் மற்றும் 15 பதவிகளில் மிகைகளும் காணப்பட்டன. திறைசேரி செயலாளரின் 03/2014 மற்றும் 25/2014 இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு புறம்பாக 04 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2015 செப்டம்பர் 01 திகதி முதல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 2,945,623 இற்கான தொகையொன்று சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. அது தவிர சபையினால் 2012 முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதியில் நியமனக் கடிதம் ஏதும் இன்றி 07 ஊழியர்களை ஈடுபடுத்தி 2017 திசெம்பர் 31 திகதி வரை சம்பளம் ரூபா 7,657,486 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற / குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

சபைக்கு சொந்தமான ரூபா 293,000 தொகை பெறுமதியான 04 கை டிரக்டர்கள் 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் திருத்த வேலை மேற்கொண்டு ஓட்டுவதற்கு பயன்படுத்துவற்கு அல்லது அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், ரூபா 20,826,010 தொகை பெறுமதியான 06 வாகனங்கள் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் போது சேதனப் பசளை மற்றும் ரன் பொஹானிய விற்பனை நிலையங்களில் மொத்த வருமானம் ரூபா 9,191,535 தொகையாக இருந்ததுடன், இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக சம்பளம் மற்றும் படிகள் மற்றும் ஏனைய மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 21,958,487 தொகை செலவிடப்பட்டிருந்தது. ரன் பொஹானிய விற்பனை நிலையத்திற்காக கொள்வனவு செய்து அகற்றப்பட்ட பழவகைகள் நிறைவேற்று நிலை உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றிருக்காததுடன் 2018 மே 18 திகதி இடப் பரிசோதனையின் போது அகற்றப்பட்ட பழங்களின் பகுதிகள் 4 லீற்றர் அளவிலான 59 ஐஸ் கிரீம் கிண்ணங்களில் நிரப்பப்பட்டு அதிகுளிரூட்டியில் களஞ்சியப்பட்டிருந்தது. பழவகை கிண்ணங்கள் முறைசாராத விதமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

**3.6 பெறுகைகள்**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் ஆண்டின் போது நிர்மாண வேலைகள் மற்றும் பண்டங்களும் சேவைகளும் வழங்குவதற்காக ரூபா 31,876,097 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.5.2 ஒப்பந்த வேலை நிருவாகம்

சபையினால் 06 நிர்மாண வேலைகளுக்காக 836,375 சதுர மீற்றர்கள் இடை சொருகல் கற்கள் பதிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட கூறுவிலைகளை மிகைத்து ரூபா 295,240 தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 08 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 86,963,768 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 02 சதவீதம் முதல் 69.4 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 06 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 76,048,770 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 4.1 சதவீதம் முதல் 80.2 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

### 4.2 உள்ளக கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் உள்ளகக் கணக்காய்வு அலகு நிறுவப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 ஜூன் 09 திகதி DMA/29(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஆண்டிற்காக 02 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் சேகரித்தல்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) செலவுக் கட்டுப்பாடு
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஊ) கணக்கீடு